ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

# ஆர்ய தர்மம்.

———o———

सदा कर्मौघानां भवतु करणे चादरभरः
तथा दानासक्तिर्निजविभवमुल्लंघ्य लसतु ।
भृशं पाण्डित्यं स्ताद्यदि सममशास्त्रीयमयि किं
स वा सा वा तद्वा भवति भुवनश्लाघनपदम् ॥

उपपत्राधिपः ।

எப்பொழுதும் மிகுந்த ஆதரவுடன் பலகர்மாக்களைச் செய்யட்டும். தனது ஐசுவர்யத்திற்கு அதிகமாக தானம் செய்கிறானென்று பிரஸித்தி ஏற்படட்டும். சாஸ்திரங்களிலும் விசேஷமான பாண்டித்தியம் உண்டாகட்டும். இவையாவும் சாஸ்திர விரோதமாயிருந்தால் யாது பயன்? விதிக்கு மாறுதலாய் அநுஷ்டிக்கப்படும் கர்மாவையும் தானத்தையும் விபரீதமான பாண்டித்தியத்தையும் ஜனங்களே ஒப்பமாட்டார்களல்லவா!

ஒருவன் ஒருகாரியத்தைச்செய்கிறதாயிருந்தால் ஒன்றையும் கவனியாமல் தன்புத்திக்குத்தோன்றியபடியே சரியென்று தீர்மானித்து அனுஷ்டிப்பதில் உபயோகமில்லை. பின்னை சாஸ்திரங்களையும் கற்றறிந்த கல்விமான்களையும் நன்கு விசாரித்து எவ்வித அபிப்பிராயம் முடிவாய் ஏற்படுகின்றதோ அதையேதானும் அங்கீகரித்து அவ்விதம் தவறாமல் அனுஷ்டித்தால் அதற்குற்ற பலனை எதிர்பார்க்கலாம். இல்லாவிடில் சரீரசிரமம், பொருள் நஷ்டம், உலகத்தார்களின் நிந்தை முதலானவைகளே பயனாகமுடியும். ஆகையால் வைதிககார்யங்களை சாஸ்திராபிப்பிராயப்படியே அனுஷ்டிக்க வேண்டும்.

இதினால் தற்காலம் லோகக்ஷேமத்தின் பொருட்டென்று பெயரைக்கூறி சாஸ்திரவிரோதமாய் தீண்டாமையை விலக்க வேண்டுமென்று செய்யும் முயற்சியால் அதிகமான பாபமும் லோகாபவாதமும் ஏற்படுமேயன்றி அற்பமேனும் எதிர்பார்க்கும் பயன் கிட்டாதென்பது திண்ணம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
குரோதன-௵ ஆனி-மீ ௧௨௨

# சண்டாளஜாதி தத்வ நிருபணம்.

(௫௫௦-வது பக்கத்தொடர்ச்சி.)

ஒரே பிராமணஜாதியிலுள்ள பிர்மசாரி, கிருஹஸ்தன் முதலியவர்களுக்குள் பிர்மசாரிக்குப் பிக்ஷைவாங்கி ஆகாரம் செய்யும்படியும், கிருகஸ்தர்களுக்கு பிக்ஷை போடும்படியும் சொல்லும் சாஸ்திரப்பிரகாரம் நடப்பதை பிர்மசாரிகளிடம் பக்ஷபாதமென்றும், கிருகஸ்தர்களை அவர்களுக்குஅன்னமிடும்படி ஹிம்ஸிக்கிறார்களென்றும் கூறமுடியுமா? சிற்சில காரியங்களில் விலக்குவிதியாகச் சிலவற்றை சாஸ்திரப்பிரமாணங்களைக் கொண்டு அனுஷ்டிப்பதால் நமக்குள் சினேகமில்லை என்று எங்ஙனம் சொல்ல முடியும். இன்னும் பாருங்கள்; நம் தேசத்திலுள்ள மிராசுதார்கள் அனைவரும் தம்தம் நிலங்களைத் தீண்டத்தகாதவர்களைக் கொண்டு தான்னியங்களையடைகிறார்கள். இதனால் இவ்விருவர்களுக்கும் ஒற்றுமையிருந்தே தீரவேண்டுமென்று ஏற்படவில்லையா? மேலும், தீண்டத்தகாதவரென்று கூறப்பட்ட குடிகளுக்கு மிராசுதார்கள் அவ்வக்காலங்களில் பசியில்லாமல் சுகமாய் சாப்பாடு முதலான கார்யங்கள் நன்கு நடைபெறவேண்டி தான்யமும்,பணமும், வஸ்திரமும் கொடுத்துதவி, அறுப்பு ஸமயங்களிலும் தம் வீட்டுக்குத் தான்யம் எடுப்பதற்கு முந்தி அந்தக்குடியானவனுக்குக் கொடுக்கவேண்டியதைக் களத்தில் கொடுக்கிறார்கள் என்பதும் பிரசித்தமே. பின்னும் இவர்களுக்குக் கல்யாணம் நேர்ந்த காலங்களிலும் வட்டியில்லாமல் ரூ. 100, 200, கொடுத்தும் மிராசுதார்கள் ஒத்தாசை செய்கிறார்கள். இவ்வித காரியங்

களெல்லாம் தீண்டாதவர்களிடம் கருணையும் பிரியமும் இல்லாமல் துவேஷத்தாலா நடத்துகிறார்கள்! மிராசுதார்களுக்கும் குடியானவனுக்கும் ஒற்றுமையில்லாவிடில் ஸாகுபடி காரியம் எங்ஙனம் நடைபெறும். தீண்டாதவர்களுக்கு ஷேக்ஹாண்ட் (Shake-hand) கொடுத்து அவர்களை நம் வீட்டுத்திண்ணையில் உட்காரவைத்தால் தான் அவர்களிடம் நமக்கு ஒற்றுமையிருக்கிறதென்றும் அவ்விதமில்லாவிடில் இல்லையென்றும் எப்படிச் சொல்லமுடியும்? வெவ்வேறு தேசத்திலிருந்துகொண்டு ஒருவரையொருவர் நேரில் பார்க்காமல் லெட்டர் மூலமாய்த் தெரிந்துகொண்டு மிகவும் ஒற்றுமையாகப் பலபேர்களிருக்கிறார்களென்பதையறியாதார் ஒருவருமில்லை. மகாத்மா காந்தியவர்களை பரம ஸாதுவாகக் கருதி அவரிடம் விசேஷ அபிமானத்துடன் அவர் எவ்விதம் சொன்னாலும் அவ்விதம் நடத்தவும் தயாராயிருக்கும் பல்லாயிரக்கணக்கான ஜனங்களும் அவரை நேரில் பார்த்துப் பேசி அவரிடம் ஷேக்ஹாண்ட் (Shake-hanb) பெற்று ஸாகிருத்தார்களா? இதுவிஷயமாய் இன்னும் விஸ்தாரமாய் நிரூபிக்க முடியுமானாலும் விரிவிற்கஞ்சி புத்திமான்களுக்கு இம்மட்டே போதுமென்று முடித்துவிடுகிறேன். தீண்டாமையினால் சகோதர ஒற்றுமைக்கு யாதொரு பாதகமுமில்லை. ஒரே சகோதரர்களாயிருப்பவர்களும் ஒற்றுமையில்லாமல் விரோதிகளாயிருக்கலாம். தீண்டாதஜாதியாயிருந்தாலும் அவர்களும் மற்ற ஜாதிகளும் ஒற்றுமையுடனிருக்கலாம். ஒற்றுமைக்குக் காரணம் மனப் பிரியமேயல்லாமல் வேறல்ல. இதுவிஷயமாய் ஜாதிநிர்ணயம் என்கிற கிரந்தத்திலும் ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதைப் பார்த்தும் தெரிந்துகொள்ளலாம்.

நான்காவது கீழ்ஜாதிகளின் கஷ்டநிவர்த்தி:—

“தீண்டாதவர்களை நாம் விலகும்படி சொல்வதாலும், கிராமக்கிணறு, குளம், கோவில் முதலியவிடங்களில் அவர்களைப் பிரவேசிக்கக் கூடாதென்று தடுப்பதாலும் அதிகமான கஷ்டத்தை அவர்கள் அடைகிறார்கள். எல்லா ஜனங்களையும் கஷ்டமின்றி சுகமாயிருக்கும்படி செய்யவேண்டிய கடமை நமக்கிருக்க அதை விட்டு நாம் மாத்திரம் சுகமாயிருந்து பிறரைக்கஷ்டப்படுத்துவது

நியாயமில்லை. ஆகையால் தீண்டாமை முதலிய சில கெட்ட வழக்கங்களை யொழித்து அவர்களையும் சுகமாயிருக்கும்படிசெய்ய வேண்டும் என்று இவ்விதம் சில கருணாநிதிகள் கருதுவதாகத் தெரிகின்றது. பொதுவாய் ஒரு பிராணி கஷ்டப்பட்டால் யாரா யிருந்தாலும் நம்மாலியன்றவரையில் அதை நிவர்த்தி செய்ய வேண்டிய கடமை நமக்கு உண்டு. இந்தக் கடமையைத் தீண்டத்தகாதவர்களிடமும் நாம் செலுத்த வேண்டியது முக்கியம். தீண்டத்தகாதவர்கள் விஷயமாய் ஏற்பட்டனவும் அனுஷ்டானத்தில் நடைபெற்று வருவதும், சில வைதிகர்களால் கூறப்படுவதுமான நிர்ப்பந்தங்கள் எப்பொழுது ஏற்பட்டன? யாரால் ஏற்படுத்தப்பட்டன? என்பதை முந்தி விசாரிக்கவேண்டும். தீண்டாதவர்களை ஹிம்ஸிக்கவேண்டுமென்று கங்கணம்கட்டிக்கொண்டிருக்கிறார்களென்று சில கருணாநிதிகளால் நிந்திக்கப்படும் தற்காலத்திலுள்ள வைதிகர்களால் இவை ஏற்படுத்தப்பட்டனவா? அல்லது பிறராலா? தற்கால வைதிகர்களாலேற்படுத்தப் படவில்லை என்பது யாவருமறிந்த விஷயமே. அன்றேல், இக் கொடிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியவர் யார்? சாஸ்திரங்களே. அவ்வித சாஸ்திரங்கள் எவை என்பதைத் துவக்கத்தில் விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டிருப்பதால் இங்கு விவரிக்க வில்லை. சாஸ்திரங்களால் விதிக்கப்பட்ட பகவானுடைய ஆக்ஞையை விலக்கவோ, சேர்க்கவோ நம் போன்றவர்களுக்கு அதிகாரமில்லை என்பது திண்ணம். தாயாயிருப்பினும் சாஸ்திரம் விலக்கவேண்டுமென்று கூறினால் விலக்கியே தீரவேண்டுமென்றும் அவ்விதமே நடைபெறுகிறதென்றும் முன் கூறியதை இச்சமயம் மறக்கக் கூடாது. தெய்வமாக பூஜிக்கக் கூடிய தாய் விஷயத்தில் கூட விதியை மாற்ற அதிகாரமில்லை என்றால் மற்றவர்கள் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? சாஸ்திரம் தான் ஏன் இவ்விதம் பக்ஷபாதமாகக் கூறுகிறதென்று கேட்பதும் உசிதமல்ல.

**गुणकर्मविभागशः** "அவர்களின் பாபபுண்ய கர்மாக்களுக்குத் தக்கவாறு ஜன்மாவையும் கர்மாவையும் அடைகிறார்கள். நான் பக்ஷபாதமாய் ஒருவரை மேலாகவும் மற்றொருவரைக் கீழாகவும் செய்யவில்லை" என்று ஸ்ரீ பகவானே ஸ்பஷ்டமாய்சொல்லியிருக்

கிறர். சாஸ்திரங்களால் ஏற்படுத்தப்பட்ட விதியைக்கஷ்டமோ சுகமோ எவரும் முடிந்தவரையில் அனுஷ்டித்தே தீரவேண்டும். இவ்விதமிருக்க தீண்டத்தகாதவர்கள் விஷயத்தில் சாஸ்திரவிதியைத் தள்ள வேண்டுமென்றும் அதற்கு வைதிகர்கள் உடன்படவில்லை என்றும் கூச்சலிடுவது மிகவும் அறிவின்மையே. உண்மையை விசாரித்தால் தீண்டாதவர்களை அதிகக் கஷ்டப் படும்படி சாஸ்திரம் கூறவில்லை என்றே தோன்றுகிறது. அதையும் விசாரிப்போம். மார்க்கத்தில் தீண்டாதவர்களுக்கு விலகுவது சிரமமாயிருந்தால் மற்றவர்கள் விலகிப்போகிறுர்கள். அவர்கள் தான் விலகவேண்டும், நாம் விலகக் கூடாதென்கிற நியமமில்லை. அக்கிரஹாரத்திலோ மற்றுமுள்ள நியமத்துடன் கூடிய பிராமண வைசிய, சூத்திரர்களுடைய தெருவிலிருக்கும் கிணற்றில் தான் இவர்கள் ஜலம் எடுக்க வேண்டுமென்கிற நியமமில்லை. இவர்கள் வசிக்குமிடத்திலேயே என் கிணறுகளை வெட்டிக்கொள்ளக் கூடாது? அதற்கு அவர்களுக்குச் சக்தியில்லாவிட்டாலும் அவர்களுடைய கஷ்டங்களை விலக்க வேண்டிக் கங்கணம் பூண்டு, வெளிவந்திருப்பதாகப் பறையறையும் கருணைக் கடலான பிரபுக்கள் உண்மையில்ஜீவகாருண்யமுள்ளவர்களாயிருப்பின் சொற்பப் பொருளைச் செலவிட்டு என் அவர்களுக்குக் கிணறுகளை வெட்டிக் கொடுக்கக் கூடாது? அவ்விதம் செய்வதை வேண்டாமென்று எவர் தடுக்கிறுரோ தெரியவில்லை. இந்தப் பிரபுக்களின் கருணை தங்கள் பொருளுக்குச் செலவின்றித் தீண்டாதவர்களைப் பாபகர்மாவைச் செய்யும்படி ஏவவும் அதனுல் மற்றவர்களுக்குஹிம்சையை யுண்டு பண்ணவும் மட்டும் தான் உபயோகப்படுமென்று தோன்றுகிறது. இக்கலியில் இந்தமாதிரி பரோபகாரத்தைப் பெரிதாய்க் கொண்ட கருணாமூர்த்திகள் தோன்றுவது மிகவுமெளிதே. கிராமங்களுக்கு வெளியிலிருக்கும் குளங்களில் தீண்டாதவர்கள் வரக்கூடாதென்று தடுப்பவர்யாருமிருப்பதாகத் தெரியவில்லை. அவர் வரமுடியாத கிராமமத்தியிலும், தேவாலயங்களுக்குள்ளும் இருக்கும் குளங்களில் அவர்கள் வருவது உசிதமில்லை என்று சொல்லலாம். சில தீர்த்தங்களில் பிராமண ஜாதியாயிருந்தாலும் விழுப்பாயிருப்பவன், வீட்டுக்காகாதவள், பிரஸவித்தவள், ஆசௌசமுள்ளவன் இவர்கள் ஸ்நானம் செய்யக்கூடா

தென்று நியமமேற்பட்டு அவ்விதமே நடைபெற்று வருகின்றது. அதற்காக அவர்கள் வருத்தப்படுவது நியாயமா? அவ்விதமே தீண்டத்தகாதவர்களும் ஜாதியாலும், கர்மாவாலும் அசுத்தமுள்ளவர்களாகையால் புண்ணிய தீர்த்தங்களான சிலவற்றிற்கு அவர்களுடைய ஸம்பந்தம் கூடாதென்று சாஸ்திரப் பிரமாணங்களைக் கொண்டு விலக்கப்பட்டிருக்கின்றது. மற்ற நதிகளிலோ, வெளியிலுள்ள குளங்களிலோ அவர்களிஷ்டப்படி ஸ்நானம்செய்வதை யார் மறுப்பார். ஆகையால் இதனுல் அவர்களுக்கு யாதொரு கஷ்டமும் ஏற்பட நியாயமில்லை. "தேவாலயங்களில் நான்கு வர்ணத்தார்களும் தங்களிஷ்டப்படி உட்சென்று கடவுளைப் பிரார்த்தித்து தம் தம் பிறவிப் பிணியையகற்ற முயலுவதுபோல் தீண்டாதவர்களும் ஏன் முயற்சிக்கக் கூடாது? அவர்களைவரக் கூடாதென்று தடுத்துக் கஷ்டப்படுத்துகிருர்கள்" என்று சிலர் சொல்லுகிருர்கள். இதையும் விசாரிப்போம்.

இந்துக்களென்று பொதுவாய்க் கூறப்பட்டாலும் அவர்களுக்குள் பல ஜாதிபேதங்களும், ஆராதிக்கிற ஈசுவரமூர்த்திகளில் பல பேதங்களுமிருக்கின்றன. விஷ்ணு பக்தர்களான சிலர் சிவனைத் தரிசிப்பதில்லை. சிவபக்தர்களான சிலர் விஷ்ணுவையும் தரிசிப்பதில்லை. ஈசுவரமூர்த்திகளில் அந்தந்த அதிகாரிக்குத் தக்கவாறு பலவாருன மூர்த்திபேதங்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விதம் கூறப்பட்டிருப்பதற்கு எந்தெந்த அதிகாரிகளுக்கு எவ்வித மூர்த்திகளில் அபிமானம் ஏற்படுகின்றதோ, எவனெவன் எதெதை உபாஸிக்க அதிகாரியோ அவனவன் அந்தந்த மூர்த்தியை ஆராதித்து இஷ்டத்தைப் பெறவேண்டுமென்பதே முக்கிய நோக்கமாகும். இக்கருத்தைக்கொண்டுதான் ஆதியிலவதரித்த ஸ்ரீ பரமாசார்யாளும் ஆறு மதங்களையும் பிரதிஷ்டை செய்திருக்கிருர்கள். அதிகத் தாமஸகுணம் பொருந்திய ஜனங்களுக்குத் தாமஸகுணமுள்ள ஈசுவரமூர்த்தியை ஆராதிப்பதில் தான் பிரியமிருக்கும். அதற்குத்தான் அவர்களும் அதிகாரிகளாவார்கள். வேதமந்திரத்தால் பூஜிக்க அருகமில்லாதவர்கள் அதனுல்தான் பூஜிப்பேன் என்று கூறுவதும் தவருகும். வேதமந்திரங்களால் பூஜிக்க அதிகாரமுள்ளவர்கள் வேறுவிதமாய் பூஜிப்ப

தும் உசிதமில்லை. தீண்டாதவர்களுக்கு உபாஸிக்கக்கூடிய மூர்த்திகள் சிலவுண்டு. அவைகளை அவர்கள் ஜாதி வழக்கப்படி ஆராதித்தால் இஷ்டஸித்திபெறமாட்டார்கள் என்பதில்லை. எந்த மாதிரி தேவதாமூர்த்திகளை யார் உபாஸித்தாலும் உடனே பிரத்தியக்ஷத்தில் பயனைப்பெறுவதென்பது ஸாத்தியமில்லை. **ते पुनन्त्युरुकालेन** என்று சான்றோர் சொல்லியபடி சாஸ்திரங்களை நம்பி நமக்கும்பகவான் அநுக்கிரகம் செய்வாரென்று உபாஸிக்கிறோம். இந்தசாஸ்திரமேதீண்டாதவர்களை உங்கள் வழக்கப்படி குலதெய்வமான வீரன், கருப்பன் முதலான தெய்வங்களை நீங்கள் ஆராதித்தால் பகவான் அந்த ரூபமாயிருந்துகொண்டு அனுக்கிரகிப்பார் என்று கூறினல் அதை ஏன் அவர்கள் அங்கீகரித்து அவ்விதம் நடத்தி ஸித்திபெறக்கூடாது? எந்த ஆலயங்களில் அவர்களை வரக்கூடாதென்று சாஸ்திரம் தடுக்கின்றதோ அங்குதான் நாங்கள் வருவோமென்று செய்யும் பிடிவாதத்திற்கு யாது பயன் நேருமென்பதை நம் நண்பர்கள் ஏன் சற்று கவனிக்கக்கூடாது? பிரஸித்தமான சிவ, விஷ்ணு ஆலயங்களில் சென்று பகவானைத் தரிசிப்பவர்கள் சீக்கிரம் பலங்களைப் பெறுகிறார்கள் என்ருவது தீண்டாதவர்கள் உபாஸிக்கும் தெய்வங்கள் அவ்விதம் சீக்கிரம் பலத்தையளிக்கச் சக்தியற்றவை என்ருவது கூறமுடியுமா? பகவானுடைய அனுக்கிரகத்தைப் பெறுவதற்கு அவரவர்களுடைய சிரத்தையே முக்கிய காரணமாகுமேயல்லாமல் மூர்த்திபேதம் காரணமல்ல. இந்த அபிப்பிராயத்தையே,

**यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।**
**तस्य तस्याचलां भक्तिं तामेव विदधाम्यहम् ॥**

“ எவனெவன் என்னை மண், சிலை லோஹம் முதலியவைகளால் எந்தெந்த மாதிரி சரீரமாக ஏற்படுத்தி முன் ஜன்மத்திலிருந்தவாசனையாலேற்பட்ட சிரத்தையுடன் கூடினவனாய் பக்தியுடன் பூஜிப்பதற்கு விரும்புகிருனே அந்தந்த பக்தனுக்கு அவன் உபாஸிக்கும் மூர்த்தியிடம் திருடமான பக்தியை நான் உண்டுபண்ணுகிறேன். ”

அதனால் யாது பயன்?

स तया श्रद्धया युक्तस्तस्याराधनमीहते ।
लभते च ततः कामान्मयैव विहितान्हितान् ॥ ७-२२.

“ அதிகமான சிரத்தையுடன் கூடிய எவன் தன்னால் ஒரு மாதிரி கற்பிக்கப்பட்டிருக்கிற தேவதையை ஆராதிக்கிறானோ அவன் ஆராதிக்கும் மூர்த்தி ரூபமாயிருக்கும் என்னால் கொடுக்கப்பட்ட ஸகலமான இஷ்டங்களையும் அந்த தேவதா மூர்த்தியிடமிருந்து அடைகிறான்” என்று கீதாசாஸ்திரத்தில் பகவானே நேரில்வெளியிட்டிருக்கிறார். இதனால் எந்த இடத்தில்எந்தமாதிரி உருவமாகக் கற்பித்து யார் ஆராதித்தாலும், சிரத்தையுடன் ஆராதித்தால் அந்தந்தரூபமாயிருந்து அவரிஷ்டத்தைப் பகவான் கொடுக்கிறாரென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவில்லையா? தீண்டாதவர்களும் அவர்களிருக்குமிடத்திலேயே மரத்தடியிலோ, வெளிபூமியிலோ ஸௌகர்யமானவிடத்தில் கல்லையோ, கட்டையையோ வைத்துத் தங்களிஷ்டதேவதையாக அதைப்பாவித்து சிரத்தையுடன் ஆராதித்தால் நான் அனுக்கிரகம் செய்யமாட்டேனென்றும், இதர ஜாதிகளுடன் சேர்ந்து தாங்கள்வருவதற்கு யோக்கியமில்லாத பெரிதான தேவாலயங்களில் வந்து தர்சித்தால் தான் அனுக்கிரகம் செய்வேனென்றும் எங்காகிலும் பகவான் சொல்லியிருக்கிறாரா? அல்லது பெரிய ஆலயங்களில் வந்துதரிசிப்பவர்களுக்கு அதிக பலம் கிடைக்கிறதென்றும் மரத்தடியில் வைத்து ஆராதிப்பவர்களுக்குப் பலம் அற்பமாகத்தான் ஏற்படுமென்றும் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றதா? அனுபவத்திலாகிலும் தெரிகின்றதா? எந்த இடத்தில் எந்தமாதிரி ஆராதித்தாலும் பக்தி சிரத்தையுடன் ஆராதிக்கும் பக்ஷத்தில் அவர்களிஷ்டத்தை நான் அளிக்க சித்தமாயிருக்கிறேனென்று பகவான் கீதா சாஸ்திரத்தில் வாய்விட்டுக் கதரியிருப்பதைச் சற்றும் கவனியாமல் எதற்காக வீண்வாதம் செய்ய முன்வரவேண்டும். தாமாக ஒன்றை மனதில் நினைத்துக்கொண்டு உலகத்தையும் கெடுத்துத் தாமும் கெட்டுப்போகவேண்டி தீண்டாதவர்களை ஆலயத்தில்வரக்கூடாதென்று சிலர் தடுப்பது பெரிய தப்பென்றும் எங்ஙனம் கூச்சலிடத்துணி

கிருர்களோ ? இந்த ஜாதியிற் பிறந்த நந்தனர் எந்த ஆலயத்தில் உட்புகுந்து தர்சனம் பண்ணி முக்தி பெற்ருரோ தெரியவில்லை. அவரைப் பலர் ஆலயத்திற்கு வரும்படிகேட்டுக்கொண்டும் தாம்வருகிறதற்கு அருகால்லவென்றும்வரமாட்டேனென்றும் சொல்லிவிட்டுவெளிவீதிகளிலிருந்துநடராஜாவைத்தரிசித்ததாகப் பெரியபுராணத்தில் சொல்லப் பட்டிருக்கின்றதே. தற்காலத்திலுள்ளவர்கள் அவரைக்காட்டிலும் எந்த விஷயத்தில் மேம்பட்டவர்களென்றும் ஆலயப்பிரவேசத்தில் அவருக்கில்லாத அதிகாரம் இவர்களுக்கெப்படி ஏற்பட்டதென்பதையும் பொறுமையுடன் சற்று கவனித்திருந்தால் பிறர்பேரில் இவ்விதம்வீணை அபவாதத்தைச் சுமத்த முன்வர நியாயமில்லை, மேலும், தீண்டாதவர்களைப் பிராமணர்கள் ஹிம்ஸிக்கிருர்களென்று அநாவசியமாய்ச் சிலர் பிராமண நிந்தை செய்கிருர்களே யல்லாமல் அவர்கள் அவ்விதநோக்கமுள்ளவர்களாகத் தெரியவில்லை. ரதோத்ஸவ காலங்களில் தீண்டாதவர்களுடன் பிராமணர்களும் சேர்ந்து நின்றுகொண்டு தேர்வடத்தை இழுக்கவில்லையா ? மாயவரம் திருவிடைமருதூர், கும்பகோணம் முதலியஸ்தலங்களில் ஸ்வாமி தீர்த்தம் கொடுக்கிற சமயங்களில் எல்லோரும் சேர்ந்து ஸ்நானம் செய்யவில்லையா ! சிறந்த பண்டிதர்களான பாகவதரனைவரும் பிராமணர்களால் நிறைந்த பெரிய ஸபையில் நந்தனர் சரித்திரத்தை மிகவும் பக்தியாய் பிரஸங்கம் செய்யவில்லையா ? அம்மஹானுடைய சரித்திரத்தைச்செவியுறும் அச்சபையிலுள்ள வேதியரனைவரும் அகமகிழ்ந்து நந்தனருடைய பாக்கியத்தைப் பலவாருய் போற்ற வில்லையா ? இவையெல்லாம் அவர்களை ஹிம்ஸிக்க வேண்டுமென்ரு செய்கிருர்கள்? பிரத்தியக்ஷத்தில் இவ்விஷயங்களை எல்லாம் நன்கறிந்தும் அறியாதவர்போல் பிறர்மேல் குறை கூறுவது அறிஞர்களுக்கழகா ? தீண்டத்தகாதவர்கள் ஆலயம் முதலிய சிலவிடங்களில்பிரவேசிக்காமலிருப்பதால் அவர்களுக்கு யாதொரு கஷ்டமுமில்லை. பின்னே ஏழ்மைத்தனத்தால் உணவுக்கு வருந்திக் கஷ்டப்படுகிருர்கள், ஆலயப்பிரவேசத்தாலும் பிராமணர்கள் வீட்டில் புகுவதாலும் இக்கஷ்டம் எப்படிநிவர்த்தியாகும் ? கண்ணில் இருக்கும் ரோகத்திற்குக் கையில் மருந்து

போட்டால் நிவர்த்தி ஏற்படுமா? பிரபுக்களாயிருக்கிறவர்கள் பணவசூல் செய்து அதனால் அவர்களுக்கு உதவி செய்தால் தாரித்திரிய ரோகம் நிவர்த்தியாகிச் சுகித்திருப்பார்கள். தீண்டாதவர்களைமுன்னுக்குக்கொண்டுவரவேண்டுமென்று கூத்தாடிக் கூச்சலிடும் கருணைக்கடல்கள் இந்த வார்த்தையைக்கவனிப்பதேயில்லை. யாராவது நிர்ப்பந்தமாய்த்தெரிவித்தாலும் அந்த விடத்தில் பலமாய் மௌனம் சாதிக்கிறார்கள். இதனால் தீண்டாதவர்களிடம் இவர்களுக்கிருக்கும் கருணை வெள்ளம் எவ்வளவுபெருகியிருக்கிறதென்பது நன்கு விளங்கவில்லையா?

மேலும், தீண்டாதவர்களை முன்னுக்குக்கொண்டுவரவேண்டுமென்கிற விஷயத்தில் மஹாத்மா காந்தியவர்கள் அதி முயற்சியுடனிருக்கிறாரென்றும் அவர்களின் அபிப்பிராயத்தையே தாங்களும் பின்பற்றுகிறோமென்றும் பறையறைந்து கொண்டும் பலர் தமக்குத் தோன்றியவாறு கூறுவதையெல்லாம் மகாத்மாவின் அபிப்பிராயமாய்ச் சாற்றிப் பல ஆஸ்திகர்களின் மனதைத் துன்புறுத்துகிறார்கள். இவ்விஷயமாய் மகாத்மாஜீ அவர்களிடத்தில் நேரில் கலந்து அவர்களின் அபிப்பிராயம் எவ்வளவுவரையில் இவர்களின் நோக்கத்தைப் பின்பற்றுகிறது என்கிற உண்மையை அறிய எமக்குச் சமயம் நேரவில்லை. ஆயினும் காந்தியின் அபிப்பிராயத்தையே பின் தொடர்கிறோம் என்று சொல்லுகிறவர்களுக்குள்ளே இவ்விஷயத்தில் அனேக அபிப்பிராய பேதங்கள் இருப்பதாகத் தெரிகிறபடியால் இவர்களால் சொல்லப்படும் விஷயம் பூராவும் மகாத்மாவின் அபிப்பிராயம் தான் என்று நம்புவதற்கு இடமில்லாமலிருக்கிறது. இந்த விஷயத்தில் பத்திரிகைகள் மூலமாகவும் சில ஆப்தர்கள் வாயிலாகவும் நான் அறிந்துகொண்டவரையில் தீண்டாதவர்களை இந்துக்களுடைய ஆலயங்களில் சுவாமிதர்சனத்திற்காகவும், கிணறுகளில் ஜலம் எடுப்பதற்காகவும் அக்கிரகாரம் முதலிய இடங்களில் வீட்டுத் திண்ணைகளில்சூத்திரர்களைப்போல் இவர்களையும்உட்காரும்படிக்கும் ஆதரவு அளிக்கவேண்டுமென்றும் நான்கு ஜாதிகளைத் தவிர சண்டாளன் என்று வேறான ஓர் ஜாதிப்பிரிவு இல்லையென்றும் மகாத்மா அவர்கள் கருதுவதாகத் தெரிகின்றது. இந்த அபிப்பிராயத்தி

னும் எவ்வளவுவரையில் உண்மையாய் இருக்கும் என்பதை நாம் தீர்மானிக்க முடியவில்லை. இவ்விதமே உண்மையாயிருப்பின் மகாத்மா அவர்களுக்கு இருக்கும் மகிமைக்கு இவ்விதம் கூறுவது அழகல்லவென்பதே எமது அபிப்பிராயம்.

தற்காலம் இவ்வுலகிலுள்ள கோடிக்கணக்கான பலஜனங்களும்போற்றக்கூடியமகிமையும் பெருமையும் வாய்ந்தவர்மகாத்மா காந்தி அவர்கள் தான் என்பதை யறியாதார் யாருமிலர். இவ்விதமகிமை பெற்ற அவர்கள் முற்பிறவியிற் செய்த நற்கர்மத்தின் பயனுல் பேத புத்தி விலகி உலகிலுள்ள விஷயங்களில் பற்றுதலை அறவே யொழித்து வைராக்கியம் பெற்று ஒருவிதமான பிடிப்பை உறுதியாய்க் கொண்டிருப்பதால் அவர் மனதில் உலக வியவகாரத்தைப் பொருத்து எவ்விதம் கருதினுலும் அவரைப் பொருத்தமட்டில் அது அதிக பாதகமாகமாட்டாது. என்று சொன்னுலும் "சிறிது, பெரிது, இது நம்முடையது, இது பிறருடையது, எவ்விதத்திலும் பொருளைப் பெறவேண்டும், உலக சுகத்தை நீண்டு அனுபவிக்கவேண்டும். நாமே எல்லாருக்கும் மேலானவன்" என்பது முதலான தோற்றங்களை அதிகம்கொண்டு அக்ஞானக்கடலில் மூழ்கிக்கொண்டு இவருடைய நடத்தையைப் பின்பற்ற வேண்டுமென்கிற ஆவல்கொண்ட கோடிக்கணக்கான ஜனங்களுக்கு அவர்களின் புத்திக்கிருக்கும் பக்குவத்தையும் அதிகாரத்தன்மையையும் கவனியாமல் தம்முடைய நிலைமையிலேயே அவர்களுமிருப்பதாகக்கருதி அவர்கள் அதிகமான கஷ்டத்தை அடைவதற்குக் காரணமாயும் சாஸ்திரங்களுக்கும், ஸாதுக்களின் அனுஷ்டானங்களுக்கும் நேர் விரோதமாயிருக்கும். இந்தமாதிரி விஷயத்தை எங்ஙனம் மகாத்மா அவர்களும் வெளியிடத்துணிந்தார்களோ! மேற்கூறும் விஷயத்தையும் சற்று கவனிக்கவேண்டும். லோகக்ஷேமார்த்தமாய் அத்வைதமதத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று அவதரித்த ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாரவர்கள் காசிமா நகரில் கங்கையில் ஸ்நாநம் செய்து தம் சீடர்களுடன் திரும்பி வரும்கால் மார்க்க மத்தியில் இவரை பரீக்ஷை செய்யவேண்டி சண்டாள வேடம் பூண்டு வந்த விசுவநாதரைப் புலையனெனக்கருதி நம் பரமாசார்யாள் (गच्छ गच्छ) விலகு

விலகு என்று கூறினதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அறிவே அவ்வுருவென்று கருதத்தகுந்தவரும் சகல கலைகளையும் கசடறக் கற்றுணர்ந்தவரும் அத்வைதமதத்தை நன்கு நிலை நாட்டியவரு மான அம்மகான் இவ்விதம் கூறியதற்கு யாது காரணமென்று யோசிப்பின் அவர்களுக்குப் பேதபுத்தியில்லாவிடினும் தம்முடன் கூடவிருக்கும் சிடர்கள் காமக்குரோதங்களுக்கிடுபட்டு பேத புத்தியுடனிருப்பதால் நம் அனுபவத்தைவெளியிட்டால் அவர்கள் கெட்டுப்போவார்களென்று நினைத்துத் தாமும் அவர்கள் நிலையி லிருந்துகொண்டு இவ்விதம் சொல்லியிருக்கிறார்களென்றே கூற வேண்டும். அதற்குப் பிறகு புலையராய் வந்திருக்கும் விசுவநாத ருக்கும் இவர்களுக்கும் வாதம் ஏற்பட உண்மையில் இவர் புலைய ரல்லவென்றறிந்த நம் ஆசார்யாள் **गुरुरित्येषा मनीषा मम** பேதபுத் தியைப் போக்கி சகல வஸ்துக்களையும் பரமாத்மஸ்வரூபமாய் பார்க்கும் அறிவுடையோர் எவராயிருப்பினும் அவர் எனக்கு குரு என்று எனது அபிப்பிராயம் என்று விடையளித்திருக்கிறார் கள். இதனால் ஆசார்யாளின் உட்கருத்தில் பேதமில்லை என்று மாத்திரம் தெரிகின்றது. வெளி வியவகாரங்களில் அதைக்காண் பித்தால் ஸாமான்ய ஜனங்கள் இதைப் பின் பற்றிக் கெட்டுப்போ வார்கள். அவ்விதம் கெடுப்பது தர்மமல்ல என்று துவக்கத்தில் பேத வியவகாரம் செய்திருக்கிறார்களென்று நன்கு புலப்பட வில்லையா ?

பின்னும், ஸ்ரீ கண்ணபிரான் அர்ச்சுனனுக்குப் பலவாறாக உபதேசித்து முடிவில் " நீ கர்மயோகத்தை அவசியம் செய்ய வேண்டுமென்று நிரூபித்து உன் ஆத்மப்பிரயோஜனத்தையுத் தேசித்து நீ செய்யாவிட்டாலும் பிறருக்காகவாவது நீ அனுஷ் டித்தே தீரவேண்டுமென்று அடியில் வரும் வசனத்தால் போதிக் கிறார்.

**लोकसंग्रहमेवापि सम्पश्यन्कर्तुमर्हसि ।**

நீ அரசனாயிருப்பதால் உன் ராஜ்யத்திலுள்ள சகல ஜனங்களும் தம் தம் தர்மத்தை விதிவழுவாது நன்கு அனுஷ்டிக்க வேண்டி

யது முக்கியமெனக்கருதியாவது நீ கர்மானுஷ்டானம் செய்ய வேண்டும். என்னால் செய்யப்படும் கர்மாநுஷ்டானத்தால் லோக சங்கிரகம் எப்படி ஏற்படும் என்று சங்கிப்பாயாகில் சொல்லு கின்றேன் கேள், என்று மறுபடியும் பகவானே

यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः ।
स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥

" சகல சாஸ்திரங்களையும் நன்கறிந்து அவைகளிற் கூறியவாறு அனுஷ்டிப்பவன் சிரேஷ்டன், அவ்வித சிரேஷ்டன் நல்ல கர்மா வையோ தீயகர்மாவையோ எதை எதை அனுஷ்டிக்கிறானோ அந்தக்கர்மாவையே அவன்நடத்தையைப் பின்பற்றும்ஸாமான்ய ஜனங்களும் அனுஷ்டிக்குமே யல்லாமல் வேறு விதமாய் மாறாது, வைதிககார்யத்திலும் லௌகிக கார்யத்திலும் அவன் எதைப் பிரமாணமாகக் கருதுகிறானோ அதையே உலகமும் அனுஸரிக் கும், ஆகையால் சிரேஷ்டனான உன்னால் வர்ணாசிரம தர்மங்கள் நன்கு அனுஷ்டிக்கப் படாவிட்டால் உலகமும் அனுஷ்டிக்காமல் பாபத்திற்குள்ளாகும். உலகத்தை ரக்ஷிக்கவேண்டியது நீ அவ சியம் உன் தர்மத்தைச் சரியாய் நடத்தவேண்டும் என்று செப்பு கின்றார்

மேலும், வேறு காரணங்களை நீ கவனிக்க வேண்டாம் என்னுடைய ஆசாரத்தைக் கவனிக்கும் உன்னாலும் என்னால் செய்யப்படுவதுபோல் செய்யப்பட்டுத் தீரவேண்டும்.

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किंचन ।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥

" ஹே அர்ஜுனா! ஸர்வலோகேசுவரனான எனக்குச் செய்ய வேண்டியதான யாதொரு கர்மாவும் கிடையாது. ஏன் கிடை யாதென்றால் ஸகலமும் என்னாலடையப் பட்டிருப்பதால், மூன் றுலகங்களிலும் அபேக்ஷிக்கக் கூடிய வஸ்து யாதொன்றுமில்லை. ஆகையால் ஒருவிதமான கர்மாவும் நான் செய்யவேண்டியதில்லை. இவ்விதம் பெறவேண்டியதைப் பெற்று கிருதகிருத்தியனாயி

ருக்கும் நானும் கர்மானுஷ்டானம் செய்து கொண்டே வருகி றேன், உன்போன்றவர்களுக்குச் சாஸ்திரீயமான கர்மானுஷ் டானத்தைச்செய்யாமல்விடஎப்படிமுடியும்? கிருதகிருத்யாளான தங்களுக்குக் கர்மானுஷ்டானம் எதற்கெனச் சங்கிப்பாயாகில்

यदि ह्यहं न वर्तेयं जातु कर्मण्यतन्द्रितः ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥

நான் ஒரு சமயம் அனாதரவாய்க் கர்மானுஷ்டானம் செய்யாமல் இருப்பேனாகில், ஹே அர்ஜுனா! ஜனங்கள் என்னுடைய மார்க் கத்தையே பூராவும் அனுசரித்து நடப்பார்கள். அவ்விதம் நடந்தால் என்னதோஷம் ஏற்படுமென்றால் கூறுகின்றேன். கேள்

उत्सीदेयुरिमे लोका न कुर्यां कर्म चेदहम् ।
सङ्करस्य च कर्ता स्या मुपहन्यामिमाः प्रजाः ।
न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसङ्गिनाम् ॥

"இவ்வுலகிலுள்ள ஜனங்கள்யாவும் ஜகத் பிரதிஷ்டைக்கு தர் மமே மூலகாரணமென்று சுருதிகளில் கூறப்படும், தர்மத்தைக் கைவிடுவதால் அநியாயமாய் நாசத்தையடைந்துவிடும் தர்ம நாச த்தால் ஏற்படும் வர்ணஸாங்கர்யம் முதலான தோஷங்களுக்கு நானேகர்த்தாவாக ஆய்விடுவேன். என்னைப்பார்த்து சகல ஜனங் களும் கர்மானுஷ்டானத்தை விட்டு, பாபத்திற்குள்ளாகும். அவ் விதமானால் நானே அவர்களைக்கொன்றவனாக ஆகிறேன். ஆகை யால் கர்மானுஷ்டானத்திற்கு அதிகாரிகளான அக்ஞர்களுக்கு சாஸ்திரவிருத்தமான ஆசாரங்களைப் போதித்து புத்திபேதத்தை உண்டுபண்ணக்கூடாது." என்று கீதா சாஸ்திரத்தில் விஸ்தார மாய் நிரூபித்திருக்கிறார். இதனால் எவ்வளவு அறிவாளிகளாயி ருந்தாலும் எவ்விதமகிமை பெற்றிருந்தாலும் சாஸ்திர விருத்த மான ஒரு கார்யத்தைச் செய்ய வேண்டுமென்று ஸாமான்ய ஜனங்களுக்கு தம் அனுஷ்டானத்தினாலும், வியவகாரத்தினாலும் போதிப்பது கூடாதென்றும், அப்படிப்போதிப்பதால் அதை யனுஷ்டித்துக் கெட்டுப்போகும் ஜனங்களை இவர்களே ஹிம்ஸித்

தவர்களாகிறூர்களென்றும் ஸ்பஷ்டமாய் ஸ்ரீபகவானுலேயே வெளியிடப்பட்டிருப்பதை மகாத்மா காந்தியவர்கள் சற்றும் கவனியாமல் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்கிற சாஸ்திர விருத்தமான இந்த அபிப்பிராயத்தை எப்படி வெளியிட முன்வந்தார்களோ!

லோகக்ஷேமத்தின்பொருட்டுப் பாடுபடுகிறேமென்று முன்வந்தவர்கள் சாஸ்திர விருத்தமான ஆசாரத்தைக் கடைப்பிடித்தொழுகும்படி போதித்து ஜனங்களைப் பாபத்திற்குள்ளாக்குவது எங்ஙனம் உசிதமாகும். இவ்விதம் செய்வதுதானு லோகக்ஷேமமானகார்யம். இதற்குமுன் எத்துணையோ மஹான்கள் இவ்வுலகக்ஷேமத்திற்குப் பாடுபட்டவர்களுண்டு. அவ்விதமிருந்தும் தீண்டாமையை யொழித்தால்தான் உலகத்திற்கு க்ஷேமமுண்டாகுமென்று ஒருவராலும் கண்டுபிடிக்கப்படாத அபூர்வமான குறுக்குவழியைத் தற்காலத்திலுள்ளவர்கள் கண்டுபிடித்திருக்கிறூர்கள். இவர்கள் எவ்வளவுமுயற்சி எடுத்துக்கொண்டு சிரமப்பட்டாலும் டவுன் வாஸிகளான சில தீண்டாதவர்களைத் தவிர மற்றுமுள்ள ஆயிரக்கணக்கான கிராமங்களில் வசிப்பவர்களிடம் இவர்கள் பிடிவாதம் பலிக்காது என்று ஆங்காங்கு வஸிப்போர்களுக்கும் நன்கு தெரிந்தவிஷயமே. நகரவாஸிகளான சிலரைத்தான் ஏன் இவர்கள் பாபத்திற்குள்ளாக்கி தாமும் தோஷத்திற்கு ஆளாகவேண்டுமென்று கருதிப் பிரமாணங்களின் வாயிலாக உண்மையையறிவித்தால் பிறகாகிலும் இந்தக் கெட்டகார்யத்திலிருந்தும் நிவர்த்தியடைவார்களென்று இவ்விதம் வெளியிடமுன்வந்தோம். ஒருவர்பேரில் அசூயையினுலோ, பக்ஷபாதத்தினுலோ இவ்விஷயத்தை வெளியிடவில்லை என்பது உண்மை. இதற்குப்பிறகும் ஸத்தியாக்கிரகம் என்னும் பிடிவாதத்தை நாங்கள் இந்த விஷயத்தில் விடமாட்டோமென்று கூச்சலிடும்பக்ஷத்தில் அவர்களுக்கு ஆஸ்திக புத்தியைக்கொடுத்து சாஸ்திரீயமான தர்மமார்க்கத்தில் பிரவேசிக்கும்படி அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று எங்கும் நிறைந்து பரஞ்ஜோதிஸ்வரூபமாய் பிரகாசிக்கும் கருணுநிதியான

பரமேசுவரனுடைய திருவடிகளைத்தியானித்து இவ்விஷயத்தை யும் இத்துடன் முடித்துக் கொள்ளுகிறோம். சுபம்.

इत्थं शास्त्रवचांसि साधुचरितान्यालोक्य सद्देशिको-
द्भूताव्याजकृपाबलेन लिखितो ग्रंथोऽधुनायं मुदा ।
राधानाथपदाम्बुजातयुगळे भक्त्यार्पितोऽमुं प्रभुः
स्वीकुर्याद्भगवान्मुकुन्द इति तं याचामहे सादरम् ॥

ஸ்ரீமதாசார்ய சரணுளுடைய அவ்யாஜமான கருணுபலத்தைக் கொண்டு சாஸ்திர வசனங்களையும் பெரியோர்களின் அனுஷ்டானங்களையும் நன்கு கவனித்து எழுதி வெளியிடப்பட்ட இந்நூலை “எதைச்செய்தாலும், எதைப்புசித்தாலும் அதை எனக்கு அர்ப்பணம்செய்” என்று கீதா சாஸ்திரத்தில் கூறியதற்கிணங்க பக்தியுடன் பகவானுடைய சரணகமலங்களில் ஸமர்ப்பணம் செய்யப்பட்டது. இதை ஸகல லோகங்களுக்கும் பிரபுவான பகவானுன ஸ்ரீ முகுந்தரும் அங்கீகரிக்கவேண்டுமென்று மிகவும் ஆதரவுடன் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறோம். சுபம்.

ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள்,
ஸ்ரீஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகள் மடம்
ஆஸ்தானவித்வான் ஆர்யதர்மம்உபபத்திராதிபர்.

ஆர். கிருஷ்ணஸாமி அய்யர், எம்.ஏ.,பி.எல்.,
ஹைகோர்ட்டு வக்கீல்.

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.